# NSW HEALTH

## COVID-19 Key Points – Monday 11 October 2021

- இன்றைய நாள் நம் அனைவருக்கும் ஒரு மிகவும் உற்சாகமான நாள் ஆகும்! முன் வந்து தடுப்பூசியைப் போட்டுக்கொண்டதற்கு உங்களுக்கு நன்றி. உங்களால்தான் எமது முதலாவது முக்கிய மைல்கல்லை நாம் எட்டியுள்ளோம், அத்துடன் அதனால்தான் இந்த நோய்த்தொற்றுப் பரவலிலிருந்து வெளியேறுவதில் இத் தேசத்தை நியூ சவுத் வேல்ஸ் வழிநடத்திச்செல்கிறது.
- தடுப்பூசியின் விகிதத்தைப் பொறுத்தவரை, ஒரு மருந்தளவைப் பெறுவதில் 90.3%-ஐயும், இரண்டு மருந்தளவுகளையும் பெற்றுக்கொள்வதில் 73.5%-ஐயும், நியூ சவுத் வேல்ஸ் தற்போது எட்டியுள்ளது.
- உங்கள் சூழ்நிலையைப் பொறுத்து, உங்கள் கோவிட்-19 தடுப்பூசிகளின் ஆதாரத்தைப் பெற பல வழிகள் உள்ளன. பின்வரும் இணைப்பில் இதுபற்றி மேலும் அறிந்துகொள்ளுங்கள்: https://www.nsw.gov.au/covid-19/vaccination/proof
- நோய்த்தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதை நாங்கள் காண்போம், ஆனால் எங்கள் சுகாதார அமைப்பில் கணிசமான தொகையை நாங்கள் முதலீடு செய்துள்ளோம், அத்துடன் நமது மாநிலம் தயார் நிலையில் உள்ளது.
- நேற்று இரவு 8 மணிக்கு முன்னரான 24 மணி நேரத்தில், 498 பேர் உள்ளூர் கோவிட்-19 நோய்த்தொற்றால் பீடிக்கப்பட்டுள்ளனர். கவலைக்கிடமாக, 8 பேர் உயிரிழந்துள்ளனர்.
- நாங்கள் மீண்டும் திறந்து வெளிவரும் இந்த வேளையில், உங்களுக்கு இலேசான அறிகுறிகள் இருந்தாலும்கூட, மக்கள் பரிசோதனையைச் செய்துகொள்ள முன் வருவது மிகவும் முக்கியம் ஆகும். நியூ சவுத் வேல்ஸ் முழுவதும், 500-க்கும் மேற்பட்ட கோவிட்-19 பரிசோதனை இடங்கள் உள்ளன.
- உங்களுக்கு கோவிட்-19 நோய்த்தொற்று ஏற்பட்டால், உங்களுக்குத் தேவைப்படும்போது மருத்துவப் பராமரிப்பை நாடுவதைத் தயவுசெய்து உறுதிசெய்யுங்கள்.
- இன்னும் கட்டுப்பாடுகள் நடைமுறையில் உள்ளன என்பதை நினைவில் வைத்திருங்கள். உங்கள் பகுதியில் உள்ள கட்டுப்பாடுகளை அறிந்துவைத்திருப்பதைத் தயவுசெய்து உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்: https://www.nsw.gov.au/covid-19/rules
- இன்னும் சவால்கள் ஏற்படப்போகின்றன. தயவுசெய்து ஒருவருக்கொருவர் அன்புடனும் மரியாதையுடனும் நடந்து கொள்ளுங்கள், தனிப்பட்ட பொறுப்பை எடுத்துக் கொள்ளுங்கள், அத்துடன் நாம் அனைவரும் ஒருவரையொருவர் கவனித்துக் கொள்வதை உறுதிசெய்து கொள்வோம்.